

# பனிமயம்

நவம்பர் 2025

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



*அன்பு மக்களே, நலந்தானா?*

*நவம்பர் மாதத்திலே மரித்த ஆன்மாக்களை நினைவுகூர்கின்றோம். ஆண்டு முழுவதுமே அவர்களை நினைவுகூர வேண்டும் என்றாலும் நவம்பர் மாதத்தில் சிறப்பாக அவர்களுக்காக மன்றாட கடமைப்பட்டிருக்கின்றோம். "ஜீவியத்தில் நேசித்தோம், மரணத்தில் மறவோம்" என்று புத்தகங்களிலும், கல்லறைகளிலும் அச்சிடுகின்றோம். அது வெறும் அச்சிடுதலாக மட்டும் இருந்துவிடாமல் நம்மைவிட்டுப் பிரிந்தவர்களை எப்பொழுதும் நாம் நினைவில் வைத்திருப்போம், அவர்களுக்காக மன்றாடுவோம்.*

*நவம்பர் மாதத்தில் ஆன்மாக்களின் நினைவாக மூன்று காரியங்களைச் செய்ய திருச்சபை நம்மை அழைக்கிறது.*

1. *இறந்த ஆன்மாக்களுக்காக அனுதினமும் ஜெபிப்பது. இந்த ஜெபமானது அவர்கள் மோட்ச பாக்கியத்தை அடைய உதவுகிறது.*
2. *இறந்த ஆன்மாக்களுக்காக திருப்பலி ஒப்புக்கொடுப்பது. 2 மக் 12:43 குறிப்பிடுவதுபோல நாம் ஒப்புக்கொடுக்கும் பாவம் போக்கும் பலிகளின் வழியாக ஆன்மாக்கள் ஆண்டவரை சென்றடைகின்றது.*
3. *இறந்த ஆன்மாக்களுக்காக தானதர்மங்கள் செய்வது. இத்தகைய தானதர்மங்களும் ஆன்மாக்கள் விண்ணகப் பேரின்பத்திற்குள் நுழைய உதவுகிறது.*

*மேற்கூறிய மூன்று காரியங்களையும் நம் பெற்றோர்கள் அல்லது உறவினர்கள் இறந்தபிறகு செய்வதோடு அவர்கள் நம்மோடு வாழும்போதே அவர்களுக்கான கடமைகளையும் செய்ய அழைக்கப்படுகின்றோம். வாழும்போது நம் பெற்றோருக்கு சோறு போடாமல் இறந்தபிறகு நினைவுத் திருப்பலிகள் ஒப்புக்கொடுப்பதும், அவர்கள் நினைவாக உணவு கொடுப்பதும் அர்த்தமற்ற செயலாகும். வாழும்போது நம் வீட்டில் தங்குவதற்கு உரிய இடம் கொடாமல் இறந்தபிறகு பெரிய பெரிய கல்லறைகளைக் கட்டுவது எந்த விதத்தில் நியாயமாகும்.*

*எனவே நம் பெற்றோரை, உறவுகளை அவர்கள் வாழும்போது கண்ணியமாகவும், அன்பாகவும் நடத்துவோம். இறந்தபிறகும் அவர்களுக்காக ஆண்டவரிடம் மன்றாடுவோம்.*

God Bless You All.



என்றும் பாசத்துடன்

**அருள்பணி. ஸ்டார்வின்**

திருத்தல அதிபர் & பங்குத் தந்தை

உதயம் 27 தாரகை 3

நிர்வாகி & வெளியிடுபவர்
அருள்பணி. ஸ்டார்வின்
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருள்பணி. ஸ்டார்வின்

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

**இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து**

**தற்கொலைத் தடுப்பிற்காக...**

தற்கொலை எண்ணங்களால் போராடுபவர்கள் தங்களுக்குத் தேவையான ஆதரவு, அக்கறை, அன்பு ஆகியவற்றைத் தங்கள் சமூகத்தில் கண்டுணரவும், வாழ்வின் அழகிற்கு உள்ளத்தைத் திறந்திடவும் நாம் மன்றாடுவோம்.

# உள்ளே...

1. மரியன்னையின் திருப்பெயர்கள் . . . . . . . . . . . . 4
அருள்பணி. குமார்ராஜா

2. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் . . . . . . . . 6
கலாபன் வாஸ்

3. தரிசனம் தருவாய் தாயே... . . . . . . . . . . . . . . . . 8
அருள்பணி. க.செ. பிரவீன் ராசு

4. அன்னையின் நினைவில்.... . . . . . . . . . . . . . . . 10
ஜோ. ரெஜினா கிரகோரி

5. பட்டியல் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 12
முனைவர் சி. ஜாக்சன்

6. இம்மாதப் புனிதர் . . . . . . . . . . . . . . . . . . . . . 14
அருள்சகோ. மிக்கேல் அருள்ராஜ்

7. விவிலியப் போட்டி . . . . . . . . . . . . . . . . . . . 15

8. பனிமயப் பகிர்வு . . . . . . . . . . . . . . . . . . . . . . 18

9. பனிமய சாட்சியம் . . . . . . . . . . . . . . . . . . . . 21

# மரியன்னையின் திருப்பெயர்கள்

## 35 வானதூதர்களின் அரசி!



மரியன்னையின் லொரெட்டோ மன்றாட்டு மாலையில் மரியாவை "அரசி" என்று அழைத்து பன்னிரு திருப்பெயர்கள் இடம் பெறுகின்றன. அவற்றுள் பலருக்கும் பிடித்தது முதலாவதாக வரும் "வானதூதர்களின் அரசி" (Queen of Angels). எட்டாம் நூற்றாண்டுத் துறவியான புனித ஜான் தமாஸ்கஸ் "மரியா படைத்தவரின் தாயானதால் படைப்புகள் அனைத்துக்கும் அரசியாக்கப்பட்டார். மாண்பிலும், புனிதத்திலும் அனைவருக்கும் மேலானவர். எனவே, வானதூதருக்கும் அவர் அரசி என அழைப்பது தகுதியானதே" என்று போதித்தார்.

புனித பிரான்சிஸ் அசிசி தமது இறையழைத்தலைப் பெற்றுக்கொண்டது அசிசி அருகிலுள்ள வானதூதரின் அரசி சிற்றாலயத்தில்தான். அங்குதான் அவர் பிரான்சிஸ்கன் துறவற சபையைத் தோற்றுவித்தார். அங்குதான் அவர்தம் இன்னுயிரை நீத்தார். மரியாவைப் புனித அரசி என்று அழைத்து மன்றாட்டுகளை இயற்றினார் புனித பிரான்சிஸ்.

"முழு விண்ணகமும் மரியாவின் புனிதத்தையும், மாண்பையும் கண்டுணர்ந்தது. இறையருள் நிறைந்தவராக இருந்ததால், அவர் அனைத்துப் புனிதர்கள், வானதூதர்கள் அனைவரையும்விடப் புனிதமானவர், அழகானவர்" என்றார் திருத்தந்தை 12ஆம் பயஸ்.

நீதித் தலைவரான கிதியோனிடம், "எங்களை ஆள்வீர்! நீரும் உம் மகனும். ஏனெனில் நீர் மிதியானியரின் கையிலிருந்து எங்களை விடுவித்தீர்!" (நீத 8:22) என்று இஸ்ரயேல் மக்கள் சொன்னது மரியாவுக்கும், அவர் மகன் இயேசுவுக்கும் பொருந்தும். எனவே, மரியா அனைவரையும் ஆட்சி செய்யும் அரசி. அவர் வானதூதருக்கும் அரசி என்று போதித்தனர் தொடக்ககாலப் புனிதர்கள்.

இயேசுவின் மாட்சியைப் போற்றும் பவுலடியார், "விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை, கட்புலனாகுபவை, கட்புலனாகாதவை, அரியணையில் அமர்வோர், தலைமை தாங்குவோர், ஆட்சியாளர், அதிகாரம் கொண்டோர் ஆகிய அனைவரும் அவரால் படைக்கப்பட்டனர். அனைத்தும் அவர் வழியாய் அவருக்காகப் படைக்கப்பட்டன" (கொலோ 1:16) என்கிறார். அரியணையில் அமர்வோர், தலைமை தாங்குவோர் உள்ளிட்டவை வானதூதர் அணிகளின் பெயர்களாகும். இயேசு வானதூதர் அனைவருக்கும் மேலானவர், அனைவருக்கும் அரசர் என்றால், அவரது தாயான மரியாவும் வானதூதருக்கும் அரசிதானே என்று வாதிட்டனர் திருஅவைத் தந்தையர்.

வானதூதர்கள் கடவுளுக்கு நெருக்கமானவர்கள், ஒளிநிறைந்தவர்கள், பாவம் இல்லாதவர்கள், கடவுளின் கட்டளைகளை உடனே நிறைவேற்றுபவர்கள் என்றார் புனித தாமஸ் அக்குவினாஸ். மரியாவும் அத்தகைய இயல்புகளைக் கொண்டவர் என்பதால் அவரை வானதூதர்களின் அரசி என அழைப்பது பொருத்தமே என்பது அவரது வாதம். ★

# முதுபெரும் தந்தையரின் அரசி!

36



மரியா "முதுபெருந் தந்தையரின் அரசி" (Queen of the Patriarchs) என்று அழைக்கப்படுவது பன்னெடுங்காலமாக நிலவும் ஒரு மரபு. இத்திருப்பெயரைக் கூர்ந்து ஆய்வு செய்தால் நம்மை வியப்படையச் செய்கிறது.

யார் இந்த முதுபெருந் தந்தையர்? ஆபிரகாம் ஈசாக்கு, யாக்கோபு தொடங்கி இஸ்ரயேலரின் பன்னிரு குலமுதுவர்கள் அனைவருமே முதுபெருந் தந்தையரே. இயேசு பிறப்பதற்கு முன்னர் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த இவர்களுக்கும் மரியா அரசி என்பது எதனால்? என்ற கேள்வி எழலாம். ஆனால், முதுபெருந் தந்தையருக்கும், குறிப்பாக ஆபிரகாமுக்கும் அன்னை மரியாவுக்கும் நிறைய தொடர்புகள் இருக்கின்றன.

முதலில், மரியாவும் "ஆபிரகாமின் மகள்தானே" (லூக் 13:16)! பவுலடியார் ஆபிரகாமை "நம் இனத்தின் தந்தை" (உரோ 4:1) என்று அழைக்கிறார். யூதர்கள் அனைவருமே ஆபிரகாமின் பிள்ளைகள்தான். எனவே, மரியாவும் ஆபிரகாமின் மகள்தான். அதே பவுலடியார் "நம்பிக்கை கொண்டு வாழ்பவர்களே ஆபிரகாமின் மக்கள்" (கலா 3:7) என்று சொல்லி யூதரல்லாத நம்பிக்கையாளர்களுக்கும் அவரே தந்தை என்கிறார். யூத இனத்தைச் சேர்ந்தவர், அதே வேளையில் நம்பிக்கையில் நிறைந்தவர் என்னும் வகையில் மரியா ஆபிரகாமின் மகள் ஆகிறார்.

மத்தேயு தமது நற்செய்தி நூலைத் தொடங்கும்போதே "தாவீதின் மகனும் ஆபிரகாமின் மகனுமான இயேசு கிறிஸ்துவின் மூதாதையர் பட்டியல்" (மத்1:1) என்றே இயேசுவை அழைக்கிறார். எனவே, இயேசுவின் தாயான மரியாவும் ஆபிரகாமின் மகள்தான். இருப்பினும், ஆபிரகாமைவிடப் பெரியவராக, "ஆபிரகாம் பிறப்பதற்கு முன்பே நான் இருக்கிறேன்" (யோவா 8:58) இயேசு இருப்பதால், அவரைப் பெற்றெடுத்த தாயான மரியாவும் ஆபிரகாமுக்கே அரசியாக இருப்பதில் வியப்பில்லை.

"மூதாதையருக்கு உரைத்தபடியே அவர் ஆபிரகாமையும் அவர்தம் வழிமரபினரையும் என்றென்றும் இரக்கத்தோடு நினைவில் கொண்டுள்ளார்" (லூக்1:54) என்று மரியாவே பாடியுள்ளார். எனவே, அந்த இரக்கத்தின் அடிப்படையில் கடவுள் மரியாவை ஆபிரகாமுக்கும், அவர் வழிவந்த முதுபெரும் தந்தையருக்கும் அரசியாக உயர்த்தினார் என்று போதித்தனர் திருஅவைத் தந்தையர்.

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் அவர்களின் வழிவந்த முதுபெரும் தந்தையர் அனைவரும் தங்களின் இறைநம்பிக்கையால் கடவுளுக்கு ஏற்புடையோர் ஆயினர். மரியாவின் நம்பிக்கையும், கீழ்ப்படிதலும் அவர்கள் அனைவரையும்விட மேலானது. எனவே, அவரை முதுபெரும் தந்தையரின் அரசி என்று அழைப்பது பொருத்தமானதே.



அருள்பணி. குமார்ராஜா





# இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்




சாவின் முன்னிலையில் மனித நிலையின் புதிர் மிகவும் புரியாததாகிறது. வேதனையும் படிப்படியாக வருகின்ற உடல் சிதைவும் மட்டுமல்ல, மனிதரை நோகப் பண்ணுபவை; மாறாக, அவற்றைவிடவும் அதிகமாக, நிரந்தரமாக அழிந்துவிடுவோம் என்ற அச்சம் மனிதரை வதைக்கின்றது. தம் ஆளுமை நிலை முழுமையாக அழிந்துவிடும் என்ற கருத்தையும் அது மீட்சியின்றி மாய்ந்து போய்விடும் என்ற கருத்தையும் அவர்கள் ஏற்க மறுத்து உள்ளது சரியே; இவ்வாறு செய்யும்போது தம்முடைய இதய உணர்வின் அடிப்படையிலேயே அவர்கள் சரியாகத் தீர்ப்பிடுகின்றனர். மனிதர் ஒவ்வொருவரும் தம்முள் கொண்டுள்ள நிலைவாழ்வின் ஆற்றல் வெறும் பருப்பொருள் நிலைக்கு ஒடுக்கப்பட முடியாததால் அது சாவை எதிர்த்து எழுகின்றது. தொழில் நுட்பத் துறையின் சாதனைகள் எவற்றால், அவை வெகு பயனுடையதாயிருப்பினும்கூட, மனிதரின் கவலையைத் தீர்க்க இயலாது; ஏனெனில், உடல்சார்ந்த உயிரை நெடுங்காலம் நீடிக்கச் செய்தாலும்கூட, அதன்பின் வரும் வாழ்விற்காக மனிதரின் இதயத்தில் மாய்த்திட முடியாத விதத்தில் உறைந்திருக்கும் தாகத்தை அதனால் தணிக்க முடியாது.

சாவு எவ்விதக் கற்பனைக்கும் எட்டாத விதத்தில் உளது. ஆயினும், இவ்வுலக அவலநிலையின் எல்லைகளுக்கு அப்பால் ஒரு பேரின்ப இலக்கிற்காக மனிதரைக் கடவுள் படைத்துள்ளார் எனத் திருச்சபை இறைவெளிப்பாட்டின் படிப்பினையால் உறுதியோடு கூறுகிறது. மனிதர் பாவம் செய்யாமல் இருந்திருப்பின், உடல்சார்ந்த சாவினின்று விடுவிக்கப் பெற்றிருப்பார்கள். தாம் செய்த பாவத்தால் அவர்கள் மீட்பை இழந்தனர்; இந்த மீட்பை எல்லாம் வல்ல இரக்கம் நிறைந்த மீட்பர் மனிதருக்கு மீண்டும் அளிக்கும்போது உடல்சார்ந்த சாவும் தோற்கடிக்கப்படும்; இது கிறிஸ்தவ நம்பிக்கை. ஏனெனில், மனிதர் அழிவில்லா இறைவாழ்வில் முடிவின்றி ஒன்றித்துத் தம் முழு இயல்போடு கடவுளுடன் இணைய வேண்டுமென்று அவர் அவர்களை அழைத்துள்ளார்; அழைத்துக் கொண்டுமிருக்கிறார். கிறிஸ்து தம்முடைய சாவினால் மனிதரைச் சாவினின்று மீட்டு வாழ்வுக்கு உயிர்த்தெழுந்ததால் இந்த வெற்றியை நிலைநாட்டினார். - இன்றைய உலகில் திருச்சபை எண் - 18.

### ❖ பயணத் திருச்சபைக்கும் விண்ணகத் திருச்சபைக்கும் உள்ள உறவுகள்

கிறிஸ்து இயேசுவின் மறையுடல் முழுவதும் கொண்டுள்ள ஒன்றிப்பை விருப்புடன் ஏற்று, கிறிஸ்தவ சமயம் தொடங்கிய காலத்திலிருந்தே வழிப்போக்கர்களின் திருச்சபை இறந்தவர்களின் நினைவை வணக்கத்தோடு கொண்டாடி வந்துள்ளது. ஏனெனில், 'பாவங்களினின்று மீட்கப்படும்படி இறந்தவர்களுக்காக வேண்டிக்கொள்வது

புனிதமும் பயனுள்ள எண்ணமாய் இருக்கின்றது' (2மக் 12:46); எனவே, அது அவர்களுக்காகச் செபங்களும் ஒப்புக் கொடுத்துள்ளது. இரத்தம் சிந்தி, நம்பிக்கைக்கும் அன்பிற்கும் ஒப்புயர்வற்ற சாட்சி தந்த திருத்தூதர்களும் கிறிஸ்துவில் மறைச்சாட்சிகளும் நம்மோடு கிறிஸ்துவில் நெருங்கி இணைக்கப்பட்டிருக்கின்றனர் எனத் திருச்சபை என்றும் நம்பி வந்திருக்கிறது; தூய கன்னி மரியாவோடும் தூய வான தூதர்களோடும் சிறந்த பக்தியுடன் திருச்சபை அவர்களை வேண்டிவந்திருக்கிறது...... கிறிஸ்தவ நற்பண்புகளைக் கடைப்பிடித்ததாலும் கடவுளின் அருள் கொடைகளாலும் நம்பிக்கை கொண்டோரின் பக்திக்குரிய வணக்கத்திற்கும் மாதிரிகைக்கும் உரியவர்களென எடுத்துரைக்கப்பெறும் மற்றவர்களும், அவர்களோடு சேர்க்கப்பட்டனர்.

✤ நாம் விண்ணகத் தூயோரின் நினைவைப் போற்றுவது அவர்கள் காட்டிய மாதிரிகைக்காக மட்டுமல்ல; இன்னும் மேலாக, சகோதர அன்பைச் செயல்படுத்துவதனால் திருச்சபை முழுவதன் ஒன்றிப்பு ஆவியாரில் உறுதிபெறும் என்பதற்காகவுமே (காண். எபே 4:1-6). ஏனெனில், வழிப்போக்கர்கள் நடுவிலுள்ள கிறிஸ்தவ ஒன்றிப்பு நம்மைக் கிறிஸ்துவிடம் மிகவும் நெருங்கிய முறையில் கூட்டிச் செல்வது போலவே தூயவர்களோடு நாம் கொண்டிருக்கும் தோழமையும் நம்மைக் கிறிஸ்துவோடு இணைக்கிறது; இவரே அருளனைத்திற்கும், இறைமக்களது வாழ்விற்கும் ஊற்றும் தொடக்கமுமாயுள்ளார். எனவே, கிறிஸ்து இயேசுவின் நண்பர்களும் உடன் உரிமையாளர்களுமான நம் சகோதரர் சகோதரிகள் மேலும், சிறந்த நற்செயல்கள் புரிந்தோர் மேலும் நாம் அன்பு காட்டுவது மிகவும் சரியே. மேலும் அவர்களுக்காகத் தகுந்த முறையில் கடவுளுக்கு நன்றி செலுத்துவதும் பொருத்தமானது. "அவர்களைப் பணிவுடன் வேண்டுவதும், கடவுளிடமிருந்து அவரது மகனும் நம் ஆண்டவரும் நம் ஒரே மீட்பரும் விடுதலையாளருமான கிறிஸ்து இயேசுவின் வழியாக நன்மைகளைப் பெற, அவர்களின் இறைவேண்டல்களையும் ஆற்றலையும் உதவியையும் நாடிச் செல்வதும் போற்றத்தக்கது." - திருச்சபை - எண் : 50.

*தொகுத்தளிப்பவர் :* **கலாபன் வாஸ்**







# தரிசனம் தருவாய் தாயே...

## மரியன்னை காட்சிகள் பற்றிய தொடர் 3

***இதுவரை...***

தன் மறைப்பணி பலன் தராததால் சோர்ந்து போயிருந்த திருத்தூதர் யாக்கோபுக்கு அன்னை மரியா தூண் மாதாவாகக் கொடுத்த காட்சியைப் பற்றிக் கடந்த இதழில் பார்த்தோம். அந்தக் காட்சியின் முக்கியத்துவத்தைப் பற்றித் தொடர்ந்து பார்ப்போம்.

***இனி...***

அன்னை தந்த இக்காட்சியில் இன்னுமொரு சிறப்பு உள்ளது. விரக்தியின் விளிம்பில் இருந்த திருத்தூதர் யாக்கோபுவைத் தேற்றி ஊக்கமூட்டியதோடு இக்காட்சியின் முக்கியத்துவம் முடிந்து விடவில்லை. தனது உடனிருப்பின் அடையாளமாக ஒரு மாபெரும் சின்னத்தை அன்னை யாக்கோபுக்குக் கொடுத்தார். எப்படிக் காட்சியில் அன்னை தோன்றினாரோ, அதை அப்படியே தத்ரூபமாகப் பார்ப்பதுபோல அன்னையின் அத்திருச்சுரூபம் ஒன்றைத் திருத்தூதர் யாக்கோபுவிடம் அன்னை கொடுத்தார். எப்போதும் அன்னை தன்னோடு இருக்கிறார் என்பதை யாக்கோபு உணர்ந்துகொள்ள இது உதவியாக இருந்தது.

அன்னை வழங்கிய இந்த அற்புதச் சுரூபம் இப்போது இல்லையென்றாலும், அதைப் போலவே இன்னொரு சுரூபம் செய்யப்பட்டது. 33 பேர் 44 நாள்கள் உழைத்து இந்தச் சுரூபத்தை உருவாக்கினார்கள். 5.9 அடி உயரத் தூணில் நின்று கொண்டிருக்கும் 15 இஞ்ச் உயர அன்னையின் அத்திருவுருவம் தான் தற்போது தூண் மாதா பேராலயத்தில் மக்களின் வணக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ளது. அன்னையின் இத்திருச்சுரூபத்தில் அமைந்துள்ள மணிமுடி தனிச்சிறப்பான ஒன்று. சூரியனைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ள இம்மணிமுடி 2836 முக்கோண வடிவ வைரங்களால் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் 2725 ரோஜாக்களும், 145 முத்துகளும், 74 வைடூரியங்களும், 62 மாணிக்கக் கற்களும், 46 மரகத மணிகளும் வைக்கப்பட்டு, அன்னைக்கு அழகு சேர்க்கின்றன.

தற்போது உயர்ந்து நிற்கின்ற தூண் மாதா பேராலயம் பலமுறை வரலாற்றில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. தற்போதைய பேராலயம் 17ஆம் நூற்றாண்டில் 11 டூம்களோடு ஸ்பெயின் நாட்டின் இரண்டாவது மிகப் பெரிய கோயிலாக கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. 1492ஆம் ஆண்டு அன்னை காட்சி தந்த அதே அக்டோபர் 12 அன்றுதான், கிறிஸ்டோபர் கொலம்பசின் கண்டுபிடிப்புக்குப் பிறகு அமெரிக்க மண்ணில் முதல் திருப்பலி நிறைவேற்றப் பட்டது என்பது கூடுதல் சிறப்பு. இதனாலேயே, ஸ்பெயின் நாட்டிற்கு மட்டுமன்றி, உலகம் முழுவதும் வாழும் இஸ்பானிய இனக் குடிகளுக்கும் பாதுகாவலராக தூண் மாதா அறியப் படுகின்றார்.

1936 – 1939 காலக்கட்டத்தில் ஸ்பெயின் நாட்டில் நிகழ்ந்த உள்நாட்டுப் போரின்போது பொதுவுடைமைக் கொள்கை கொண்டோர்



வீசிய மூன்று குண்டுகள் இக்கோயிலில் விழுந்துள்ளன. கோயிலின் கூரையைப் பிய்த்துக் கொண்டு தரையில் விழுந்த அம்மூன்று குண்டுகளுமே செயலிழந்து போயின என்பதும், இன்று அக்குண்டுகள் தூண் மாதா பேராலயச் சுவரில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்பதும் இக்காட்சியைப் பற்றிய மற்றொரு முக்கியக் குறிப்பு.

## 2. கார்மேல் மலைக் காட்சி (1251)

இஸ்ரயேல் மக்களின் வரலாற்றில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த இடம்பெற்றுள்ளது கார்மேல் மலை. கார்மேல் என்ற பெயருக்கு எபிரேயத்தில் தோட்டம் அல்லது கடவுளின் திராட்சை என்ற பொருளுண்டு. எசாயா 35:2இல் ஓர் அழகிய இடமாக இது வருணிக்கப்பட்டுள்ளது. ஆண்டவரின் அடியவராகிய எலியா இறைவாக்கினர் வாழ்ந்ததும், பாகாலின் பொய் இறைவாக்கினர்கள் முன்னிலையில் யாவே இறைவனின் மாட்சியை அவர் வெளிப்படுத்தியதும் இந்த மலையில்தான் என்பது கூடுதல் சிறப்பு.

புனித பூமியில் அமைந்துள்ள இப்புனித மலையைத் தங்கள் துறவின் மையமாகக் கொண்டு, 12ஆம் நூற்றாண்டில் கார்மேல் சபைத் துறவிகள் உருவாயினர். தங்கள் துறவு ஆசிரமத்தின் நடுவில் அன்னை மரியாவுக்கென ஓர் ஆலயத்தை எழுப்பி, அந்த இடத்தின் பெயரால் அன்னையைக் கார்மேல் அன்னை என அழைத்து வந்தனர். இந்தக் கார்மேல் சபைத் துறவிகளின் தலைவராக இருந்த சைமன் ஸ்டாக் என்பவருக்கு 14ஆம் நூற்றாண்டில் அன்னை மரியா கார்மேல் அன்னையாகக் காட்சியளித்தார்.

ஆனால், ஆச்சரியம் என்னவென்றால், கார்மேல் அன்னையின் காட்சி கார்மேல் மலையில் நடைபெறவில்லை. கார்மேல் மலையில் உருவான இச்சபையின் தலைமையகம் இங்கிலாந்து நாட்டிற்கு மாற்றப்பட்ட பின்னர், அங்குதான் இக்காட்சி நடைபெற்றது. இந்தக் காட்சியின் சிறப்பு, இக்காட்சியில் சைமன் ஸ்டாக் என்ற தலைமைத் துறவிக்கு அன்னை தந்த அழகிய பழுப்புநிற உத்தரியம் தான்.

இக்காட்சியின் வரலாறு என்ன? 14ஆம் நூற்றாண்டில் அன்னை தந்த இந்த உத்தரியம் இன்றுவரை கார்மேல் சபைத் துறவிகளின் துறவு ஆடையை அலங்கரிப்பதன் முக்கியத்துவும் என்ன? அப்படி இந்தக் காட்சியில் அன்னை என்ன செய்தியை அவருக்குச் சொன்னார்? விடை தெரியக் காத்திருங்கள், அடுத்த இதழ் வரை.



அருள்பணி.
க.செ. பிரவீன் ராசு

# அன்னையின் நினைவில்...



"அம்மா! நான் பெண்ணா பிறந்ததால நான் உங்களை என்கூட வைச்சுக் காப்பாத்த முடியலம்மா. நீங்க போட்ட பிச்சையில நான் நல்லா இருக்கேன்மா. ஆனா நீங்க வாழாம போனதற்குக் காரணமாயிட்டேம்மா. என்னை மன்னிச்சிடுங்கம்மா. மன்னிச்சிட்டேன்னு சொல்லுங்கம்மா... பேசுங்கம்மா" கல்லறையில் துயில்கொண்ட அன்னையிடம் கண்ணீருடன் புலம்பினாள் ஹெலினா.

பூரணியின் ஒரே மகள் ஹெலினா. குழந்தைப் பருவத்திலேயே தந்தையை இழந்தவள். பூரணியின் வியர்வைத் துளிகளில் வளர்ந்து படித்து, வேலைக்கும் சென்று வந்தாள். ஆயினும் திருமணத்திற்குப் பிறகு, கணவர் வீட்டில், அவள் தாயைக் கவனிக்க அவளுக்கு அனுமதி கிடைக்கவில்லை.

"திருமணமாயிட்டா, கணவன் வீடுதான் உன் வீடு. அம்மாவுக்கு ஆதரவு யாரும் இல்லைன்னா உனக்குத் திருமணம் பண்ணி வச்சிருக்கக் கூடாது. இப்ப நீ, உன் கணவன், பிள்ளைகளைப் பத்திதான் கவலைப்படனும். உங்க அம்மா யாராவது துணைக்கு வைத்துக் கொள்ளட்டும். இனி நீ கவனிக்கனும்னு அவசியம் கிடையாது" என்ற கணவன் வீட்டாரின் இரக்கமற்ற நீதிமொழிகள் நியாயப் படுத்தப்பட்டு, அவளைத் தன் தாயின் வீட்டிற்குச் சென்று பார்க்கும் வாய்ப்பையும் பறித்தது.

உழைத்து உழைத்து ஏற்கனவே நைந்து போன பூரணி, மகளின் பிரிவையும் தாங்க முடியாமல், நோயுற்று இறந்துவிட்டாள்.

ஹெலினாவின் மனசாட்சி அவளைக் கொன்றது. ஆனாலும் அழுவதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியவில்லை. அவள் கல்லறையில் புலம்புவதைக் கேட்டுக்கொண்டிருந்த அருகிலிருந்த வயதான பெண்மணி, "அழாதேம்மா. பெண்கள் கோழையாக இருந்தால் இந்த நிலைதான். ஹூம். என்னோட நிலைமை, உன்னைவிட மோசம். என் ஒரே பையனை, அவன் மனைவி அவ அம்மா வீட்டுக்குக் கூட்டிக்கிட்டு போய்ட்டாள். என்னைக் கவனிக்க ஆளில்ல. அதுதான் கல்லறையில் இருக்கும் என் கணவர்கிட்ட சொல்லிட்டுப் போக வந்தேன். நடந்ததை நினைச்சுப் புலம்புறதனால ஒரு பயனும் இல்ல. உத்தரிக்கிற ஸ்தலத்துல வேதனைப்படற உங்க அம்மாவுக்காக செபித்து, மோட்சத்துக்குப் போக மன்றாடு. பாவம், அந்த ஆன்மாக்கள். அவர்களுக்காக அவர்களே ஆண்டவர்கிட்ட மன்றாட

முடியாது. நாம்தான் செபித்து விண்ணக நிலைவாழ்வு பெற உதவனும். அதே நேரம் அவங்க உனக்காக செபிக்கலாம். ஒரு உண்மைக் கதை சொல்றேன் கேளு...

இரண்டு சகோதரிகள் இருந்தார்கள். மூத்தவள் இறந்துவிட்டாள். இளையவள் அவளை நினைத்து அழுது கொண்டிருந்தாள். இறந்தவள் அவள் கனவில் வந்து தான் உத்தரிக்கிற நிலையில் இருப்பதை அறிவித்து தனக்காக வேண்டிக் கொள்ளச் சொல்லிச் சென்றாள். அவள் உண்மையிலேயே வந்து சென்றதன் அடையாளமாக அவர்கள் வீட்டின் திரைச்சீலைக்கருகே நின்று பேசியதன் விளைவாக திரைச்சீலையின் ஒரு பகுதியில் கருகிய விரல்கள் பதிந்திருந்தது. அதனால நீ அம்மாவுக்காக செபி. அம்மா உன் வாழ்வு நலம்பெற உதவி செய்வாங்க. இறைவாக்கு போல சொன்ன அந்தப் பெண்மணிக்கு நன்றி கூறிய ஹெலினா அன்று முதல் அன்னைக்காக திருப்பலி ஒப்புக்கொடுத்தும், ஏழைகளுக்கு தர்மம் செய்தும் அன்னையின் நிலைவாழ்வுக்காக செபித்தாள்.

காலங்கள் உருண்டோடின. ஹெலினாவின் ஒரே மகள் வீணா வளர்ந்து திருமண வயதை அடைந்தாள். மாப்பிள்ளை பார்த்தார்கள். வீணாவுக்கும் மாப்பிள்ளையை ரொம்பப் பிடித்திருந்தது. மாப்பிள்ளைக்கோ நகையும், வரதட்சணையும் அதிகமாய்ப் பிடித்திருந்தது.

இரண்டு சம்பளம் இருந்தும், போதிய பணமும், நகையும் அவர்களுக்கு சேர்த்து வைக்க முடியவில்லை. “ச்சே, நகைக்கும், பணத்திற்கும் எங்கே போவது? மாப்பிள்ளை வீட்டார் ஏன்தான் வரதட்சணை கேட்கிறார்களோ?” அங்கலாய்த்தான் ஹெலினாவின் கணவன் ரூபன்.

“நீங்க மட்டும் வரதட்சணை கேட்காமல் இருந்தீங்களா?” என்று மனதிற்குள் கேட்டாள் ஹெலினா. வார்த்தைகளை வெளியே விடவில்லை. மகள் வீணா ஏக்கத்துடன் பெற்றோரைப் பார்த்தாள்.

“என்னங்க! என் நகை இருக்குது. வீணாவிற்கு எல்லா நகையையும் போட்டுரலாம். கடன் வாங்கி கல்யாணத்தை நடத்தலாம். சம்பளத்துல கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்து கடனை அடைத்து விடலாம்...” நம்பிக்கையூட்டினாள் ஹெலினா.

கல்யாண தேதி குறித்துவிட்டார்கள். வீட்டில் கல்யாணக் களை நிரம்பி வழிந்தது. ஆனாலும் பணத்தைப் பற்றிய கவலை மனதிற்குள் ஓடிக்கொண்டிருந்தது.

ஹெலினா தன் அம்மாவின் படத்தின் முன் நின்று பேத்தியின் திருமணத்தை நல்ல முறையில் நடத்திட, மாதாவிடம் பரிந்துரைக்குமாறு தன் அன்னையிடம் வேண்டிக்கொண்டு, அலமாரியிலிருந்த நகைப் பெட்டியை எடுத்து வந்து நகைகளை சரிபார்த்துக் கொண்டிருந்தாள். நகைப் பெட்டிக்கு அடியில் ஒரு கனமான உறை. வெளியில் எடுத்தாள். ‘ஒரு லட்ச ரூபாய் பணம்!’ - துண்டு சீட்டில், “ஹெலினா! என் மகளே! உன் அவசரத் தேவைக்காக சேர்த்து வைத்திருக்கிறேன். பயன்படுத்திக்கொள்” என எழுதியிருந்தது. “அம்மா, நீங்க ஆண்டவர்கிட்ட போய்ட்டீங்க. உங்களுக்கு நிலைவாழ்வு கிடைச்சிட்டு. உங்க பேத்திக்கு உதவி செய்ய வந்துட்டீங்க.” தன்னையறியாமல் வாய்விட்டுக் கதறினாள்.

அதைப் பார்த்த ரூபன் அசடு வழிந்தான். முதன்முறையாக மாமியாரை நினைத்து அவன் கண்களிலிருந்து கண்ணீர் சொட்டுகள் விழுந்தன.



ஜோ. ரெஜினா கிரகோரி

# பட்டியல்

கொஞ்சம் தூரத்திலிருந்து அந்த ஊர் திருவிழாவுக்கு, அந்த ஐந்து வயது சிறுவன், தன் தாத்தா பாட்டியுடன் வந்திருந்தான். தனது இரண்டாம் வயதில் அம்மாவையும் அப்பாவையும் விபத்தில் பறிகொடுத்த பிள்ளை! கோவில் முன்பாக போர்வை விரித்து தங்கியிருந்தார்கள்.



தாத்தாவோ, கோவில் பக்கம் சென்றுவிட, இவன் தூங்கிக் கொண்டிருந்தான். பாட்டியோ, கொஞ்சம் தள்ளி மண்ணில் அமர்ந்து, தெரிந்த ஊர்காரரிடம் உரையாடிக் கொண்டிருந்தார். திடீரென்று விழித்துப் பார்த்த அவனுக்கு, அருகில் யாரும் இல்லாதது, அச்சத்தை எழுப்பியது.

பாட்டி, பாட்டி என்று கூப்பிட்டுப் பார்த்தான். பேசிக்கொண்டிருந்த பாட்டியின் காதுகளில் அது விழவில்லை. எழுந்து கோவில் அருகில் தான் வந்த வழியில் இருந்த ஒவ்வொரு முகமாகப் பார்த்துக் கொண்டே பாட்டியைத் தேடினான். இதைப் பாட்டியும் கவனிக்கவில்லை; கண்ணுக்கு எட்டும் தூரத்தில் அமர்ந்திருந்த பாட்டியை பதட்டத்தில் அவனும் பார்க்கவில்லை.

சிறிது தூரம் சென்ற அவனுக்கு, பயம் பற்றிக் கொண்டது. இந்த இரவில், அதுவும், இந்த பெரிய திருவிழாக் கூட்டத்தில் தாத்தா, பாட்டியை எங்கு போய் தேடுவது என திணறினான். தான் இருந்த இடத்திற்கே திரும்பிவிடலாம் என்றால், அதற்கும் வழி தெரியவில்லை. அங்கேயே நின்று, அம்மா, அம்மா, என அழத் தொடங்கினான் அந்த சிறுவன்.

அழுது அழுது முகம் வீங்கிப்போன நிலையில், அங்கேயே தூங்கிப்போன அவனை இரு கரங்கள் தூக்கின. சிறிது நேரத்தில் ஒலிபெருக்கியில் அவனது தாத்தா பாட்டியை அழைத்தது அறிவிப்பு.... ஓடிச்சென்று அவனை அரவணைத்துக் கொண்டார் பாட்டி. பாட்டிக்கு ஆச்சரியமாக இருந்தது.

தான் கண்விழித்து பாட்டியைத் தேடியதையும், கூட்டத்திற்குள் சென்று, அம்மா, அம்மா என அழுது அங்கேயே நின்று விட்டதையும் சொன்னான் பேரன். வழக்கமாக ஒரு திருவிழா கூட்டத்தில் ஏற்படும் நிகழ்வுதான்.

இந்தக் கதையை படிக்கும் போது நீங்கள் உங்களை யாராக கற்பனை செய்து கொண்டீர்கள். 99.99% அந்த சிறுவனாக தன்னை எண்ணியவர்கள் தான் அதிகம் இருப்போம். உண்மையில் மையத்தில் நம்மை வைப்பதுதான் உலகின் இயல்பு. ஆனால் ஒரு சிலர் மையத்தில் இறைவனை வைத்து தனது வாழ்வை கட்டமைக்கின்றனர். அவர்கள்

தான் இறையாட்சியை உலகிற்கு அழைத்து வரும் வாயில்கள் ஆகின்றனர். நவம்பர் மாதம் அவர்களை கொண்டாடித்தான் தனது பயணத்தை தொடங்குகிறது .

புனிதர் அனைவர் பெருவிழா ஒவ்வொரு ஆண்டும் மிகச்சிறப்புடன் நவம்பர் ஒன்றாம் நாள் கொண்டாடப்படுகிறது. இந்நாளில் இறந்து விண்ணகம் சென்ற அனைத்து ஆன்மாக்களும் தெரிந்தவர், தெரியாதவர் என்ற எவ்வித பாகுபாடுமின்றி, ஆண்டவரின் வார்த்தையை வாழ்வாக்கி இவ்வுலகை விட்டு அகன்ற நல்லோர் அனைவரையும் இந்நாளில் திருச்சபை புனிதராக போற்றிக் கொண்டாடுகிறது.

தொடக்கத்தில் இவ்விழா கிறிஸ்துவுக்காக உயிர் தியாகம் செய்த மறைசாட்சிகளுக்காக கொண்டப்பட்டது, பின்பு அது கிறிஸ்துவுக்காக சாட்சிய வாழ்வு வாழ்ந்து மரித்த அனைவரின் விழாவாக புனிதர் அனைவரின் விழாவாக கொண்டாடப்படுகிறது. இவ்விழா அகில உலக திருச்சபைக்கும் திருத்தந்தை நான்காம் அர்பனால் நீட்டிக்கப்பட்டது. இவ்விழா நான்காம் நூற்றாண்டிலேயே மேற்கு திருச்சபையினரால் கொண்டாட ஆரம்பிக்கப்பட்டது.

மறைசாட்சிகளின் திருப்பண்டங்களை இந்நாளில் ஒரு ஆலயத்திலிருந்து வேறோரு ஆலயத்தில் மாற்றிக் கொண்டனர், அதிலும் குறிப்பாக அந்தியோக் நகரில் பல புகழ்ப்பெற்ற மறைசாட்சிகள் பெரிதும் கொண்டாடப்பட்டனர். உயிர்ப்பு பெருவிழா வாரத்தின் வெள்ளிக்கிழமை இவ்விழா கொண்டாப்பட்டு, பிறகு எட்டாம் நூற்றாண்டில் திருத்தந்தை கிரகோரியாரால் நவம்பர் ஒன்றாம் நாளுக்கு மாற்றப்பட்டது.

பட்டம் விட்டுக் கொண்டிருந்த தன் மகளைப் பார்த்து அப்பா, ‘இந்த நூலின் வேலை என்ன?‘ என்று கேட்டார். அதற்கு அந்த மகளோ, ‘இந்த நூல்தான் இந்த பட்டத்தின் சுதந்திரத்தையே தடுத்து நிறுத்திக் கொண்டிருக்கிறது‘ என்று சொன்னாராம். அதற்கு அப்பா, ‘இல்லை இந்த நூல் தான் பட்டத்தை பறக்க வைத்துக் கொண்டிருக்கிறது‘ என்று சொல்லிவிட்டு ஒரு கத்தரிக்கோல் எடுத்து அந்த நூலை வெட்டி விட்டாராம். இங்கும் அங்குமாக மேலே பறந்த பட்டம், சிறிது நேரத்தில் கீழே விழுந்து விட்டது.

இறைவனால் அழைக்கப்பட்டு இறைவனோடு இருக்கின்றபோது நாம் கட்டப்பட்டு வைக்கப்பட்டிருப்பது போலவும், திருப்பலிக்கும், திருவழிபாட்டு நிகழ்வுகளுக்கும், நீதியின் பாதையில் செல்ல கட்டாயப்படுத்தப்படுவது போலவும் நமக்கு தெரிந்தாலும், உண்மையாகவே நாம் வாழ்வது இறைவனின் அழைப்பிலும் அவ்வழைப்பு நமக்கு காட்டுகின்ற வழிகாட்டுதலிலும் தான் இருக்கிறது. இதனை உணர்ந்தவர்கள் புனித நிலைக்கு உருமாறுகிறார்கள்.

திருச்சபையால் உலகிற்கு உணர்த்தப்பட்ட புனிதர்களோடு, வாழும் காலத்தில் இறைவனது அழைப்பை ஏற்று இறைவனை தனது வாழ்வின் மையமாக கொண்டு, தூய நிலையில் மேலுலக வாழ்வில் நுழைந்தவர்கள் எல்லோருமே புனிதர்கள். எனவே அவர்களையும் சேர்த்துத்தான் நவம்பர் முதல் நாள் நாம் அனைத்து புனிதர்கள் விழாவை கொண்டாடுகிறோம்.

இறைவனின் அழைப்பை ஏற்று நீதியின் பாதையில் நடந்து அவரை மையப்படுத்திய வாழ்க்கை வாழ நினைக்கும் பட்டியலில் இணைய தயாராவோம்...



முனைவர் சி. ஜாக்சன்

இம்மாதப் புனிதர்

# புனித மார்ட்டின் தே போரஸ்



பெரு நாட்டில் லீமா நகரில் கி.பி. 1579இல் ஓர் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தார் மார்ட்டின் தே போரஸ். மிகவும் எளிமையான குடும்பம் என்பதால் தொடக்கக் கல்வியைக் கூட முழுமையாக பெறுவதற்கு வாய்ப்பில்லாத நிலை இருந்தது.

மருத்துவர் ஒருவரிடம் உதவியாளராக வேலைக்குச் சென்றார். அங்கே மருந்து கொடுக்கும் முறைகள் அனைத்தையும் கற்றுக் கொண்டார். ஆலயத்திற்குச் செல்லும் வழக்கம் கொண்டிருந்த மார்ட்டின், அங்கிருந்த சாமிநாதர் சபையில் உறுப்பினராக சேர்ந்தார். இவரது பணி அர்ப்பண உணர்வை கண்ணுற்ற சாமிநாதர் சபையின் தலைவர் இவரை குருத்துவத்திற்காக, குருமடம் அனுப்பிவைத்தார்.

குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட பிறகும், ஏழைகள்மீது அன்பும் கரிசனையும் கொண்டவராகவே தனது பணியை மேற்கொண்டார். நீண்ட நேரம் ஆலயத்தில் அமர்ந்து செபிப்பதை வழக்கமாக வைத்திருந்தார்.

குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட பிறகு, மருத்துவத் துறையில் பணி செய்வதற்கான வாய்ப்பு இவருக்கு வழங்கப்பட்டது. லீமா நகரில் தொற்றுநோயால் ஏராளமானோர் மடிந்தனர். பலர் தன் அறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கென்று எவ்வித மருத்துவ உதவிகளும் வழங்கப்படவில்லை. இச்சமயத்தில் மார்ட்டின் தனியொரு மனிதராக அனைவரின் காயங்களையும் கழுவி மருந்திட்டார்.

நோயாளர்கள், ஏழை, எளியவர்கள் போன்றோருக்காக உதவிட வேண்டும் என்பதற்காக பிச்சை எடுத்து உதவினார். கைவிடப்பட்டவர்கள், ஆதரவற்றோர் போன்றோருக்கு இல்லம் ஒன்றை லீமா நகரில் அமைத்தார்.

இவரைக் காட்சி தியானத்தின் மூலம் பல இடங்களில் மக்கள் கண்டிருக்கின்றனர். இவர் கருப்பு இன மக்களின் பாதுகாவலராகப் போற்றப்படுகின்றார். புனித லீமா ரோஸ்க்கு ஏற்ற நண்பராகத் திகழ்ந்தார். நோயாளிகளைத் தொட்டு குணப்படுத்த தனிப்பெரும் வரம் பெற்றிருந்தார். இயற்கையின் மீதும், உயிரினங்களின் மீதும் அதிக அன்புடையவராக வாழ்ந்தார். கிறிஸ்து ஒருவரைப் பின்பற்றுவதே தனது வாழ்வின் இலட்சியம் என்பதை உணர்ந்து வாழ்ந்தார்.

1639, நவம்பர் 3இல் விண்ணகப் பிறப்பு அடைந்தார். இவர் இறந்து 25 ஆண்டுகளுக்குப் பிறகு புனிதர் பட்ட நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன. 1837இல் திருத்தந்தை ஆறாம் கிரகோரியாரால் அருளாளர் பட்டமும், மே 6, 1962இல் திருத்தந்தை 23ஆம் யோவானால் புனிதர் பட்டமும் அளிக்கப்பட்டன. இவரின் விழா நவம்பர் 3ஆம் நாள் திருச்சபையால் கொண்டாடப் படுகிறது.



அருள்சகோ. மிக்கேல் அருள்ராஜ்



# விவிலியப் போட்டி 127

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

**பாருக்கு நூல் – அதிகாரம் 1 முதல் 6 வரை**

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

**சரியா தவறா எனக் கூறுக.**

1. பாபிலோனிய மன்னன் நெபுக்கத் நேசர்.
2. நம் கடவுளாகிய ஆண்டவருக்கு நேர்மை உரியது.
3. ஞானம் மண்ணுலகில் தோன்றிற்று.
4. இறைவாக்கினர் எரேமியாவின் செயலர் பாருக்கு.
5. சிலைகளை வழிபடுகின்ற நீதி மானே சிறந்தவர்.
6. வெள்ளரித் தோட்டத்தில் வைக்கப்படும் பொம்மை காவல் புரிகிறது.
7. பாருக்கு நேரியாவின் மகன்.
8. விவிலியமே கடவுளுடைய கட்டளைகள் அடங்கிய நூல்.
9. இலக்கியாவின் மகன் யோயாக்கிம்.
10. கடவுளிடமிருந்து வரும் ஆவியை ஆடையாய் புனைந்து கொள்.

## விவிலியப் போட்டி 126

**அக்டோபர் 2025** விடைக்குறிப்புகள்

**சாலமோனின் ஞானம்**
**அதிகாரம் 6 முதல் 10 வரை**

| | | |
|---|---|---|
| 1. | ஞானம் | 7:29. |
| 2. | ஞானம் | 10:6 |
| 3. | ஞானம் | 10:21 |
| 4. | ஞானம் | 8:1 |
| 5. | ஞானம் | 7:22 |
| 6. | ஞானம் | 7:23 |
| 7. | ஞானம் | 7:29 |
| 8. | ஞானம் | 8:1 |
| 9. | ஞானம் | 8:7 |
| 10. | ஞானம் | 7:25 |

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.11.2025**

## உங்கள் கவனத்துக்கு

பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளைத் தாளில் எழுதி பங்கு அலுவலகத்துக்கு யார் மூலமாவது கொடுத்து விடுங்கள். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். மறவாமல் குடும்ப அட்டை எண்ணையும் எழுதுங்கள். வாட்ஸ் அப்பில் விடை அனுப்ப வேண்டாம். பெயர் எழுதப்படாத விடைத்தாள்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

**63831 98510** (வாட்ஸ் அப் மட்டும்)

அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

இந்த எண்ணுக்கு வரும் விடைகள் மட்டுமே எடுத்துக்கொள்ளப்படும். பழைய எண்ணுக்கு அனுப்பப்படும் விடைகள் நிராகரிக்கப்படும்.

**வாட்ஸ் அப்பில் விடை எழுதும் சலுகை பிற பங்குகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே.**

*குறிப்பு : ஒரே கையெழுத்தில் இரண்டு மூன்று பதில் தாள்கள் அனுப்பி இருந்தால் வேறு வேறு பெயர்களில் இருந்தாலும் அவற்றில் ஒன்று மட்டுமே வெற்றி பெற்றதாக எடுத்துக் கொள்ளப்படும். இச்செயலைத் தவிர்க்கவும்*

**சரியான விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 217**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 124**

**விடை எழுதிய அன்பியங்கள் : 28**

**பரிசு பெறுபவர்கள் : 4**

1. குழந்தை இயேசு அன்பியம் **பிரான்சிஸ் வாஸ்**
2. மணல் மாதா அன்பியம் **கெபிட்டன் பர்னாண்டோ**
3. லூர்து மாதா அன்பியம் **சாண்டினா**
4. மிக்கேல் அதிதூதர் அன்பியம் **வினோ**

**பாராட்டுக்குரியவர்கள் : 121**

**அந்தோனியார் அன்பியம்**
5. சரோஜா
6. பிருந்தா
7. ஜெசி
8. ரீனா மொறாயிஸ்
9. ஜெயா

**அன்னை தெரசா**
10. ஜான்சி ராணி
11. ஜூலியட்ஸ் ரூபி
12. சாந்தி அந்தோணி சந்தியாகு

**அன்னை வேளாங்கன்னி**
13. டென்சி லோபோ
14. ஆரோன் ஷாரோன்
15. கவாஷினி ஆல்வின்
16. லிசியா ஜெகதீஸ்
17. மிஷல் மிரல்
18. ஜொசிட்டா

**கிறிஸ்தரசர்**
19. செலஸ்கி கிளமெண்ட்
20. ரெக்ஸ் கிரீன்வெல்
21. ஜூலியட்சாவியோ
22. லூரட் வசந்த்

**தஸ்நேவிஸ் மாதா அன்பியம்**
23. சுரேஷ் பிரேமா
24. சுகன் மோனிஷா
25. அஸ்கேனியஸ் அந்தோணிசாமி
26. டாரல் தீத்தோணிஸ்
27. இருதயம்மாள்
28. ராஜா ஐரின்

**திவ்ய பாலன் அன்பியம்**
29. சகாயராணி தனராஜ்
30. ஸ்டார்லக் ஏஞ்சலின்
31. சென்சிலா சகாயராஜ்
32. பிரின்சி

**பாத்திமா மாதா**
33. சுகந்தா ஸ்டெனி
34. பிச்சம்மாள்
35. அனு ஆல்வின்
36. ஸ்டெபி ரீகன்
37. ரீனா ராஜா
38. லிண்டா சீலன்

**இரக்கத்தின் மாதா**
39. இருதயம்மாள் கொன்சால்
40. சகாயராணி
41. சேவியர் அம்மாள் கோமஸ்
42. பிரைட்டன் ஜெரோபின்
43. சித்ரா மோத்தா
44. பாப்டிஸ்டா
45. செல்விபுரோ

**ஜெபமாலை மாதா**
46. சகாயம்மாள் பெனடிக்ட்
47. கல்யாணி செல்வராஜ்
48. ரூஃபஸ்
49. மேகலா ஜெகன்
50. ஜெரிசா தாம்சன்

**ஜூடு அன்பியம்**
51. கிறிஸ்டோ ஜெபினா
52. டெரன்சியா அரிஸ்டோ

**காவல் தூதர்**
53. ஜோ டரினிஷா
54. வெனிட்டாள்
55. ஜூலியஸ் தல்மேதா
56. அல்பின்
57. ரஸ்கின் வசந்தா
58. செல்வராணி
59. சார்லட் பிராங்
60. சாந்தி ஆல்ட்ரின்
61. எலிஜா இம்மானுவேல்
62. ஜெசிமா கிளாரன்ஸ்

**குழந்தை தெரசா**
63. பெர்லி டென்சன்
64. கிறிஸ்டி லிஸ்டன்
65. பெனி மொறாயிஸ்

**குழந்தை இயேசு**
66. மோனிகா செபஸ்டின்
67. எமல்டா

**மணல் மாதா**
68. ரொசாரி கோமஸ்
69. வெர்ஜினியா
70. ஹெப்சிட்டா
71. லீமாரோஸ் ஜாய்

**லூர்து மாதா**
72. ஆலிவர் வி. ராயர்
73. ஜெனோ சேவியர்
74. ரோஸ்லின் தாமஸ்
75. பிலோ கோமஸ்
76. ரஜூலா ஜான்போஸ்கோ

**மிக்கேல் அதிதூதர்**
77. ஜோஸ்பின் பர்னாந்து

**பனிமய அன்பியம்**
78. சுரேஷ் ஆனி
79. ஜாக்குலின் வினோதினி
80. ராணி
81. ஜூடு ரதி
82. அந்தோணிசாமி
83. சகாயராஜா சகாயராணி
84. மெர்லி

**பவுலடியார்**
85. ராஜா ரோஸ்லின்
86. ஒபிலியா தாமஸ்
87. ஹெலினா

**பரிபூரண மாதா**
88. சப்னா கினிஸ்டன்
89. மெடோனோ

**பொம்பெய் மாதா**
90. இம்மாக்குலேட் சதீஷ்
91. டிஃபானி அண்டோ
92. லூடா கான்ஸ்டன்
93. அண்டோ எஃபினா
94. தெரசா பிரகாஷ்
95. பெலிக்ஸ் சோபியா
96. வேன்சி கொரைரா
97. டிரைபேனா

**இராயப்பர்**
98. போஸ்கோ ரெனோ
99. டெய்ஸி
100. ரொமில்டா வெனான்சியுஸ்
101. நேவிஸ் அம்மாள்

**சவேரியார்**
102. ஜான்சி ஜெயக்குமார்
103. டெலிலா அமலன்
104. அனுஷியா பீட்டர்
105. ஜோர்னல் ஜென்ஸி
106. வினிஸ்டா ஷெரின்
107. ஜாஸ்மிலின் ஆல்டோ

**செபஸ்தியார்**
108. பிரவீனா
109. ஜெஸிலா சேவியர்
110. அந்தோனியம்மாள் டென்சிங்

**சிந்தாத்திரை மாதா**
111. நேசம்
112. ஜூடி ஆரோக்கியராஜ்
113. டோனஸ் ராயன்
114. லாசர் செல்வி

**சிறுமலர் அன்பியம்**
115. விஜி சகாயராஜ்
116. எல்சிட்டா ஆனந்தன்
117. விஜிலியா
118. தாயம்மாள்

**சூசையப்பர்**
119. கிறிஸ் ரீஜோ
120. ஹேமலதா
121. மென்சி
122. ஜெக்குலின்
123. ஜெஸி

**திருச்சிலுவை**
124. ஜஸ்டின் ஸ்நோகுளோரி

**வியாகுல மாதா**
125. லூர்து லினட்



## பிற பங்குகளிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 93

### பரிசு பெறுபவர்கள் : 4

126. தேனி — குழந்தைதெரஸ்
127. கடலூர் — ஹென்றி தாஸ்
128. சார்லஸ் கோவில் — அல்போன்சா பர்னாண்டோ
129. அண்ணாநகர் — வென்சி ராணி

## பாராட்டுக்குரியவர்கள் : 89

**சென்னை**
130. ரெஜினா கிரகோரி
131. டெனிசா கிளாட்
132. பிரேமா குணசீலன்
133. மேமா ஸ்டீபன்
134. கமலஜோதி ஜெயசீலன்
135. ஆண்டனிகா ஷெர்லி

**செங்கல்பட்டு**
136. மார்கரட் மேரி

**கொடைக்கானல்**
137. ஜெஸிந்தா மார்ட்டின்

**மதுரை**
138. ஜெஸிந்தா மேரி
139. சகோ. ஜான்ஸி மேரி

**திருச்சி**
140. ஜான்ஸி ராணி
141. மோனிட்டா கிறிஸ்டி
142. டோனி
143. மேத்யூ விவேக்

**ஆறுமுகநேரி**
144. தொம்மை அந்தோணி
145. ஜெயராணி

**ஆலந்தலை**
146. பொன் சேகாதங்கராஜ்
147. மரியம்மாள்

**தருவைக்குளம்**
148. மைக்கேல் ஸ்டிபானி

**திருப்பூர்**
149. ததேயூஸ் கரோலின்
150. பிரான்சிஸ் ஆர்லன்

**தேனி**
151. கரோலின் பிலவேந்திரன்
152. சூர்யா அன்பு

**புதியம்புத்தூர்**
153. ஹெலன் அன்னமனி

**கயத்தார்**
154. அமல்ராஜ்

**சிவகாசி**
155. ஜெர்லின்

**திண்டுக்கல்**
156. ரோசாலி
157. ஜெர்மேன்

**பேட்டை**
158. ஹேலனிட்டா

**சூலூர்**
159. சத்யாசேவியர்

**புன்னைக்காயல்**
160. ஜோஸ்னா

**வீரபாண்டியபட்டணம்**
161. ரேச்சல் பெர்லின்

**உவரி**
162. அர்லின் ஈவ்லின்

**சோமனூர்**
163. ராஜேந்திர அருள்

**தென்காசி**
164. செல்வமேரி

**உடன்குடி**
165. ஸ்நோவின்

**தூத்துக்குடி நகர பங்குகள்**

**திரு இதயங்களின் பேராலயம்**
166. கிரேட்டா ராஜா
167. அஸ்வினி டிலானி
168. ரமோலா
169. ஜெயந்தி பீட்டர்

**குருஸ்புரம்**
170. பிளாசி செல்வராஜன்
171. ஜான்சி மென்டிஸ்
172. ஆசிர்வாதம்
173. மாசில்லா
174. பௌவுசி ஜோ மைக்கேல்
175. மெர்சி ஜெரால்ட்

**லயன்ஸ் டவுண் சகாயமாதா**
176. சகாயம்
177. டோமினிக்
178. பேபின் ரால்ஃப்
179. டார்லிமா அமுதன்

**அன்னை வேளாங்கன்னி கோவில்**
180. செக்கரியா சாமுவேல்
181. லிஜியா
182. சலைத் எலிசா

**யூதா ததேயு கோவில்**
183. ஆரோக்கிய சர்மிளா
184. ஜூடி ரீத்தம்மாள் மேரி
185. ரோஸ் சேவியர்
186. ஜெனட் சேவியர்
187. லூர்து சுவிதா
188. இம்மானுவேல் சேகர்
189. சகாயமேரி
190. சகாயராஜ் ரொட்ரிக்ஸ்

**அந்தோணியார் கோவில்**
191. டயானா வினோத்
192. இருதயம்மாள் கபிரியேல்
193. வயோலா ஜான்சன்
194. மென்சிலா லொயோலா
195. மகேஷ் சுஜாதா
196. பேபி வால்ட்டர்
197. ரீடன்

**காந்தி நகர்**
198. ரியாலினோ
199. ரமேஷ் நர்மதா
200. கிளமென்சியா மேக்டன்
201. செலஸ்டின்
202. பிண்டன் சோபியா

**சார்லஸ் கோவில்**
203. சகாயிட்டா மச்சாது
204. ரூபி ஏஞ்சல்

**புனித இஞ்ஞாசியார் கோவில்**
205. சகோ. மரியசூசை ரூபி
206. சகோ. லோரா மேரி
207. பாத்திமா ஏஞ்சலின்
208. சூசை நெவின்
209. சகோ. ரூபெல்லா

**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
210. வெர்ஜின்
211. தயாபரராணி

**திரேஸ்புரம்**
212. கோல்வின் ஜேசுராஜ்
213. ஸ்நோ வெண்பா
214. கிருபா
215. அபின்சா

**பாத்திமா நகர்**
216. எவுலின் அம்மாள்
217. மேரி ஹம்லின்
218. ஷர்மிளா ரமேஷ்

**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 205**
**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 218**





# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 17)

## நவம்பர் - 2025

| | |
|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : **அருள்பணி. ஸ்டார்வின்** |
| உதவிப் பங்குத் தந்தை | : **அருள்பணி. பிரவீன் ராசு** |
| களப் பணியாளர் | : **சகோ. மிக்கேல் அருள்ராஜ்** |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| **தினசரி திருப்பலிகள்** | **சனிக் கிழமைகளில்** | | **ஞாயிற்றுக் கிழமைகளில்** | |
|---|---|---|---|---|
| காலை 5.30, 6.30 | காலை 5.30, 6.30 | திருப்பலி | காலை **5.00, 6.30, 8.00** | திருப்பலி |
| மாலை 5.30 | காலை 11.00 | செபமாலை, **நவநாள் திருப்பலி** | காலை **9.30** | ஆங்கிலத் திருப்பலி |
| | மாலை 5.30 | திருப்பலி | மாலை **5.30** | திருப்பலி |
| | மாலை 6.30 | செபமாலை நவநாள், நற்கருணை ஆசீர் | மாலை **6.30** | செபமாலை, நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00

மற்ற நாள்களில் எந்நேரமும் பங்குத்தந்தையரை அணுகலாம்.

- ✓ திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (திருவருகைக் காலம், தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)

- ✓ புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (திருவருகைக் காலம், தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).
- ✓ புதுநன்மை அருள்சாதனம் பெற விரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.

- ✓ திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00 மணிக்கு அனுமதி உண்டு. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.
- ✓ ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30
- ✓ அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : காலை 10.00 மணி - 01.00 மணி
  மாலை 04.00 மணி - 05.30 மணி
- ✓ இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.
- ✓ நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்.

# பனிமயச் சுவடுகள்

*(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)*

1. நமது மறைமாவட்டத்திலிருந்து ஒவ்வொரு பங்கிலும் உள்ள குடும்பங்கள் மற்றும் உறுப்பினர்களின் விரிவான தரவுகள் பற்றிய கணக்கெடுப்பு எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது குறித்த ஒரு **கலந்தாய்வுக் கூட்டம்** அன்பியப் பொறுப்பாளர்களுக்கு **30.09.2025 செவ்வாய்க்கிழமை** அன்று மாலைத் திருப்பலி முடிந்தவுடன் நடைபெற்றது.
2. **02.10.2025 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு மேதகு ஆயர்** அவர்களின் தலைமையில் பரிசுத்த அமலோற்பவ மாதா மதுவிலக்கு சபை, போதை நோய் நலப் பணிக்குழுவின் முன்னெடுப்பில் குடி மற்றும் போதைப் பொருள்களிலிருந்து விடுதலைபெற விரும்புபவர்களுக்காகவும் அதிலிருந்து விடுதலை பெற்றவர்களுக்காகவும் **சிறப்பு யூபிலி நன்றித் திருப்பலி** நிறைவேற்றப்பட்டது.
3. **03.10.2025 வெள்ளிக்கிழமை** பேராலயப் பங்குமேய்ப்புப் பணிப் பேரவையின் பொதுக்குழுக் கூட்டம் **மாலை 07.00 மணிக்கு அந்தோனியார் அரங்கத்தில்** நடைபெற்றது.
4. **05.10.2025 ஞாயிற்றுக்கிழமை** மாலை 06.30 மணிக்கு **விவிலிய மாத நிறைவுக் கொண்டாட்ட விழா** மாலை 05.30 மணி திருப்பலிக்குப் பின்னர் அந்தோனியார் அரங்கத்தில் நடைபெற்றது. அந்நிகழ்ச்சியில் நம் பங்கில் நடைபெற்ற விவிலிய வினாடி-வினாப் போட்டியின் வெற்றியாளர்களுக்கும், தினமும் திருப்பலியில் பங்கெடுத்த குழந்தைகளுக்கும், மறைக்கல்வி மாணவ, மாணவியருக்கு நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும், நற்செய்தி நடுவத்திலிருந்து வழங்கப்பட்ட 100 கேள்விகள் அடங்கிய விவிலியப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.
5. **07.10.2025** செவ்வாய்க்கிழமை காலை 06.30 மணி திருப்பலி **திருவிழா திருப்பலி**யாக பரிசுத்த பொம்பெய் செபமாலை மாதா சபையினரால் சிறப்பிக்கப்பட்டது.
6. பரிசுத்த அமலோற்பவ மாதா வாலிபர் சபையின் முன்னெடுப்பில் கடந்த **11.10.2025** இரண்டாம் சனியன்று இரவு 10.00 மணி முதல் அதிகாலை 05.00 மணி வரை **முழு இரவு தொடர் செபமாலை** நடைபெற்றது. நமது பங்கிலிருந்தும், மாநகரின் பிற பங்குகளிலிருந்தும் திரளான மக்கள் பங்குபெற்றனர்.
7. புனித பாத்திமா அன்னையின் திருவிழாவை முன்னிட்டு தெற்கு எம்பரர் தெருவில் உள்ள **புனித பாத்திமா அன்னையின் கெபியில் 12.10.2025 ஞாயிற்றுக்கிழமை** மாலையில் அருளிக்க ஆசீரும், **13.10.2025 திங்கள்கிழமை** காலை 07.20 மணிக்குத் திருவிழாத் திருப்பலியும், அன்று இரவு 07.30 மணிக்கு சப்பரப் பவனியும் நடைபெற்றன.
8. நமது பங்கில் செயல்பட்டு வரும் அமலவை சபையின் நிறுவனர் **அருளாளர் அகஸ்டின் பெரேரா** பற்றிய வாழ்க்கைக் குறிப்பு அடங்கிய கண்காட்சி **18.10.2025 மற்றும் 19.10.2025** ஆகிய நாள்களில் சின்னக்கோவில் வளாகத்தில் காலை 07.00 மணி முதல் மாலை 07.00 மணி வரை நடைபெற்றது.

9. **19.10.2025, ஞாயிற்றுக்கிழமை** நண்பகல் 12.00 மணி முதல்; 03.00 மணி வரையில் **'திருமணவரனுக்காக, குழந்தைச் செல்வத்துக்காக காத்திருப்போருக்காக'** சிறப்புத் திருப்பலி, நோன்பு வழிபாடு **அருள்பணி. குமார்ராஜா** அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பலரும் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

10. **புனித யூதா ததேயு திருத்தலத்திற்கு** 20.10.2025 திங்கள்கிழமை அன்று மாலை நமது பங்கிலிருந்து இறைமக்கள் திருப்பயணமாகச் சென்று திருப்பலி ஒப்புக் கொடுத்தனர்.

11. **25.10.2025** சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை **தேவமாதாவுக்கு ஒரு நாள் மாநாடு** மரியாயின் இயக்கத்தின் முன்னெடுப்பில் நமது பேராலய வளாகத்திலுள்ள **அந்தோனியார் அரங்கத்தில்** நடைபெற்றது.

12. கடந்த மாதம் செபமாலை மாதம் என்பதால் தினமும் மாலை 06.30 மணிக்கு செபமாலையும், நற்கருணை ஆசீரும் நடைபெற்றன. 31.10.2025 வெள்ளிக்கிழமை மாலை 06.30 மணிக்கு பேராலய வளாகத்தைச் சுற்றி செபமாலைப் பவனியும், பின் திவ்விய நற்கருணை ஆசீரும் நடைபெற்றன.

## பங்கில் நிகழ்ந்தவை



*வரவேற்கிறோம்*

### 1. திருமுழுக்குப் பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 41. | அந்தோணி ரப்பேல் | ரான்சா - ஸ்வீட்லின் | 26.10.2025 | திவ்விய பாலன் |



*வாழ்த்துகின்றோம்*

### 2. புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 36. | மரிய வினியா | விமல்ராஜ் - சான்யா | 01.10.2025 | பாத்திமா மாதா |
| 37. | ஸ்னோ ஆட்ரினா | ஆரோக்கியசாமி - பிரதீபா | 05.10.2025 | செபமாலை மாதா |
| 38. | ரோஸ்லின் சீலி | கில்பர்ட் - இன்ஃபன்டா | 11.10.2025 | குழந்தை இயேசு |



*ஆசி கூறுகின்றோம்*

### 3. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | நாள் |
|---|---|---|---|
| 45. | அபிஷேக் - விபா மேக்னா | பொம்பெய் மாதா | 31.10.2025 |



*செபிக்கின்றோம்*

### 4. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 52. | எக்ஸில்டா பர்னான்டோ | ஜான் கெபின் | 25.09.2025 | செபமாலை மாதா |

## நடைபெறவிருப்பவை

- ★ 01.11.2025 மாதத்தின் முதல் சனியன்று மாலைத் திருப்பலியும், **சப்பரப் பவனி**யும், தொடர்ந்து **நவநாள் வழிபாடும்** நடைபெறும். இவை ஸ்நோஸ் பசிலிக்கா யூடியூப் சேனலிலும், சூர்யா, யாழ் தொலைக்காட்சிகளிலும் நேரலையாக ஒளிபரப்பப்படும்.
- ★ **இறந்த நம்பிக்கையாளர் நினைவுநாள்: 02.11.2025 ஞாயிற்றுக்கிழமை** அன்று நம் பேராலயத்தில் காலை 05.00, 06.30, 08.00, 09.30 ஆகிய நேரங்களில் திருப்பலி நடைபெறும். மாலையில் திருப்பலி நடைபெறாது.
- ★ **07.11.2025 தலைவெள்ளிக்கிழமை** அன்று காலையும், மாலையும் நோயாளர்கள், முதியோருக்கு **இல்லங்களில் நற்கருணை** வழங்கப்படும்.
- ★ **23.11.2025 ஞாயிறு** அன்று **கிறிஸ்து அரசர் பெருவிழா**வை முன்னிட்டு பகல் முழுவதும் **தொடர் நற்கருணை ஆராதனை** நடைபெறும்.

## திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

- ❖ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும் வழங்கப்படுகின்றது. வரும் நாள்களில் **அன்பு உணவு** வழங்க விரும்புவோர் பங்கு அலுவலகத்தில் முன்பதிவு செய்யவும்.
- ❖ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசீர், திருப்பலி நடைபெறும்.

| எண். | நாள் | செய்தித் தலைப்பு |
|---|---|---|
| 60. | 11.11.2025 | அன்பும் சேவையும் |
| 61. | 18.11.2025 | அன்பும் தேடலும் |
| 62. | 25.11.2025 | அன்பும் எதிர்நோக்கும் |



## பனிமய சாட்சியம் 131

**ஜேசுதாஸ் டெய்சி, கோயம்புத்தூர்**

எனது பேரன் விவின் MBBS படிப்பிற்காக NEET தேர்வு எழுதி அரசுக் கல்லூரியில் இடம் கிடைக்க பனிமயத் தாயிடம் வந்து வேண்டியிருந்தோம். இப்போது மாதாவின் கருணையாலும், பரிந்துரையாலும் பேரனுக்கு கரூர் அரசு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்துள்ளது. இந்த சாட்சியின் வழியாக பனிமயத் தாய்க்கும், இயேசு கிறிஸ்துவுக்கும் நன்றி கூறுகிறோம். மரியே வாழ்க!


MARTIN & LOUISAMMAL
10.06.1890 - 14.07.1975 & 03.08.1897 - 08.03.1943


ALPHONSE
20.10.1927 - 01.11.2012


DASAN & NESAM


STANISLAS & ARULAMMAL





BONSIYAN & RITA
29.09.1930 - 18.12.2012 & 29.02.1932 - 07.11.2007


MATHIAS & VIRGIN
27.07.1920 - 29.06.1996 & 05.06.1925 - 08.01.1993


JAMES & AMALI
30.07.1933 - 27.09.2017 &


BOUSTIN & PUSHPAM
10.02.1922 - 09.06.2009 & 22.11.1930 - 12.2.2008


DASAN


SOOSAIAH & MECHELEN
30.08.1930 - 03.05.1984 & 18.07.1935 - 29.03.1991



CHELLIAH & AMALORPAVAM

03.07.1898 - 03.05.1969 & 15.04.1907 - 03.07.1964



TIMOTHY

24.01.1938 - 28.02.2005



JOSEPHINE

12.03.1940 - 20.7.2009



MAJELLA

24.03.1968 - 30.03.1999



VINCENT & RITA

05.04.1926 - 27.10.2004 & 28.11.1930 - 20.01.2012




ALL SOULS DAY

2025



LIGOURI

05.02.1940 - 11.06.2001



ALPHONSE

20.10.1927 - 01.11.2012



PITCHIAH & REGI

27.05.1921 - 21.11.1977 & 09.04.1928 - 03.09.2015



CLESTER

07.03.1945 - 18.06.2005



EINSTEIN

24.10.1949 - 24.05.2018



TITINA

26.07.1970 - 15.07.1988



JOHN & RITA

18.09.1920 - 24.12.2000 & 16.04.1931 - 27.10.2001



GERARD

08.03.1954 - 25.08.2004



XAVIER

01.12.1961 - 05.03.2016



ALOYSIA

21.06.1976 - 18.8.2021

# விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு

**27.11.2025**

"வாழ்க்கைப் பயணத்தில் உம் விதிமுறைகள் எனக்குப் புகழ் பாக்களாய் உள்ளன."
(திபா 119:54)



மண்ணில்
05.02.1964

விண்ணில்
27.11.2024

## A. சில்வஸ்டர் (செல்வம்)

கடும் மழையிலும், வெயிலிலும் வாடி எமக்கு நிழல் தந்து,
நெஞ்சுரம் மிக்க கடல் வாழ்க்கை போரில் நீந்தி,
எங்களை கரை சேர்த்தவரே,
உந்தன் வியர்வைத் துளியால் எங்கள் தாகம் நீக்கி காத்தவரே,
விண்ணுலகம் சென்றாலும் தூதனாய் நின்று,
இன்றும் எமைக் காக்கிறாயே!
என் சொல்லி பாடுவேன் உனை.....

**பிரிவால் துயருறும்**

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
மற்றும் குடும்பத்தினர்கள்

**நினைவுத் திருப்பலி**

28.11.2025
காலை 11 மணி
சிலுவைக் கோவில்



# விண்ணக வாழ்வின் நினைவு அஞ்சலி

“அவரது ஆன்மா ஆண்டவருக்கு ஏற்புடையதாய் இருந்து
தீமை நடுவினின்று ஆண்டவர் அவரை விரைவில் எடுத்துக் கொண்டார்.”
சாஞா 1:14



## 60ஆம் ஆண்டு

## G. பேதுரு பர்னாந்து

தோற்றம்
05.11.1917

மறைவு
10.10.1965



## எட்டாம் ஆண்டு

## P. சூசையம்மாள் பர்னாந்து

தோற்றம்
07.03.1953

மறைவு
15.11.2017

வயது : 72

பிரிவால் வருந்தும்

கணவர் :
J. பீட்டர் பர்னாந்து
மகள், மருமகன், பேரன்கள்



## 30ஆம் ஆண்டு

## ரொசாரி அம்மாள்

தோற்றம்
06.10.1918

மறைவு
03.03.1996

பாசத்தோடு பெற்றெடுத்து பணிவையும் பாசத்தையும் எமக்குணர்த்தி
உழைப்பால் எமை உயர்த்தியவர்களே நீங்கள் இறைவனில்
என்றென்றும் மகிழ்ந்திட வேண்டுகிறோம்.

மருமகன், பேரன் பேத்தி, பூட்டன்கள்

1, சவேரியா பிச்சை சந்து, மாதா கோவில் காம்பவுன்ட், தூத்துக்குடி - 1.

# 125ஆம் நாள் நினைவஞ்சலி

*"ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாகத் திகழ்வாய்"*

*(எசா 62:3)*



பிறப்பு
18.02.1977

விண்ணில்
26.07.2025

# A. சதீஷ் பர்னாண்டோ

வயது : 48

கருணைமிக்க இறைவா!
இவர் ஆன்மாவிற்கு நித்திய இளைப்பாற்றியையும்
முடிவில்லா ஒளியையும் அளித்திட வேண்டுகிறோம்.

பிரிவால் வருந்தும்

தந்தை :
J.P. பால் அலங்காரம்
மற்றும் குடும்பத்தினர்கள்

# நினைவு அஞ்சலி!

"உங்கள் பொருட்டுக் கடவுளுக்கு எப்பொழுதும் நன்றி செலுத்த
நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்."

*(2 தெச 1:3)*

**29ஆம் ஆண்டு** **23ஆம் ஆண்டு**



## திரு. அகஸ்டின் பர்னான்டோ

மண்ணில் 14.04.1918 (ஆலந்தலை)
விண்ணில் 31.10.1996 (சென்னை)

## திருமதி. சிறிய புஷ்பம் டிரோஸ்

மண்ணில் 24.03.1921 (ஆலந்தலை)
விண்ணில் 15.11.2002 (சென்னை)

நன்றியுடன் நினைவுகூரும்

அன்பு மக்கள்

திருமிகு. பொன்சேகா – றொசாரி தங்கராஜ் (விண்ணில்)
அருள்சகோ. றொசாரியோ பர்னான்டோ FMM
திருமிகு. கமலஜோதி – ஜெயசீலன்
திருமிகு. கஸ்மீர் ராஜா – ராஜகுமாரி
திருமிகு. பிரேமா – குணசீலன்
அருள்பணி. குமார்ராஜா

# விண்ணக வாழ்வின் நினைவு அஞ்சலி

## இரண்டாம் ஆண்டு

"தந்தையின் ஆசி பிள்ளைகளின் குடும்பங்களை நிலை நாட்டும்"
(சீஞா 3:9)



மலர்ந்தது
12.02.1948

உதிர்ந்தது
12.11.2023

# பொ. பெர்க்மான்ஸ் ரொட்ரிகோ

வயது : 75

அன்பின் உருவாய்
அமைதியின் சிகரமாய்
இன்முகமாய்த் திகழ்ந்த
இனியவராய் வாழ்ந்த
உங்களை என்றும் மறவோம்.

**பிரிவால் துயருறும்**

அன்பு மனைவி : சே. அமல் ராணி கொரைறா
மக்கள், மருமக்கள், பேரன்கள், பேத்திகள்,
மற்றும் குடும்பத்தினர்

**நினைவுத் திருப்பலி**

12.11.2025 - புதன்கிழமை, காலை 6.30 மணிக்கு
பரி. பனிமய அன்னை பேராலயம், தூத்துக்குடி.

SHINY Ph : 98421 31493